# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No.697/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | டெனிசிலா | க-பெ | ஆரோக்கியராஜ் |
| ஊர்: | : | கோவனி | | |
| வயது: | : | 41/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம். | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **20.07.2026**

1 ம் **எதிரி ஆஜர் . பிற எதிரிகள் ஆஜர் இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-----------------------------------------------------------------------------------------

**<u>குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடந்த தேதி என்ன என்றால் 26.06.2017. எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்றால் தேதி நினைவில்லை 2017 ம்ஆண்டு. புகார் எவ்வாறு கொடுக்கப்பட்டது நான் எழுதி கொடுத்தேன். புகாரில் யார் யார் மீது நடவடிக்கை எடுக்க சொல்லி புகார் கொடுத்தேன் என்றால் எனது கணவர், மாமியார், நாத்தனார். புகார் கொடுக்க என்னுடன் யார் யார் வந்தார்கள் என்றால் எனது அம்மா அப்பா. 26.04.2017 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் 2 நாட்கள் கழித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கையின் நகல் எனக்கு கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். புகார் எந்த காவல் அதிகாரியிடம் கொடுத்தேன் என்றால் சுப்புலெட்சுமி சார்பு ஆய்வாளர். எத்தனை மணிக்கு சென்று புகார் கொடுத்தேன் என்றால் நேரம் தெரியாது. நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.A.,B.Ed. என்ன வேலை செய்கிறேன் என்றால் 3 மாதம் வேலை பார்த்தேன் பின்னர் வீட்டில் தான் உள்ளேன். எந்த தேதியில் எனக்கு திருமணம் நடந்தது என்றால் 29.05.2015. எந்த முறை படி திருமணம் நடந்தது என்றால் கிருஸ்துவ முறை படி. எங்கு நடந்தது என்றால் செஞ்சையில் உள்ள சர்ச்சில். திருமணத்திற்கு எனது தரப்பில் இருந்து எத்தனை பேர் வந்தார்கள் என்றால் சுமார் 70 பேர் வந்தார்கள். மாப்பிளை வீட்டு பக்கம் இருந்து எத்தனை பேர் வந்தார்கள் என்றால் சுமார் 70 பேர். மைக்கல் அம்மா புகார்தாரர் திருமணத்திற்கு முன்பே வாடகை வீட்டில் தான் குடி இருந்து வருகிறார் என்றால் சரிதான். எனது திருமணத்திற்கு முன்பே மைக்கல் அம்மாவின் கணவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி வாடகை வீடு அமைதி தோட்டம் என்ற முகவரியில் உள்ளது என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னர் மேற்படி வாடகை வீட்டில் எத்தனை நாட்கள் குடி இருந்தோம் என்றால் 3 மாதங்கள். ஜான்ஸிராணி என்பருக்கு திருமணம் முடிந்து இராமநாதபுரத்தில் உள்ளார்கள் என்றால் சரிதான். எனது திருமணத்தில் ஜான்ஸிராணி

கலந்துகொண்டு அன்றைய தினமே கிளம்பிவிட்டார்கள் என்றால் சரியல்ல. செபஸ்டியன் என்பவர் எனது திருமணத்திற்கு முன்பே அவருக்கு திருமணம் ஆகி காரைக்குடியில் குடி இருந்தார் என்றால் சரிதான். போலீசார் என்னை எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். எந்த அதிகாரி காவல் நிலையத்தில் என்னை விசாரணை செய்தார் என்றால் சார்பு ஆய்ளவார் சுப்புலெட்சுமி. புகார் கொடுத்த அன்றே விசாரணை செய்தார்களா என்றால் 26.06.2017 அன்று. போலீஸ் விசாரணையில் சொன்ன அனைத்தும் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததகாக சொல்லும் தேதியில் அரியக்குடியில் பழனிச்சாமி நகரில் வீட்டில் குடி இருக்கும் போது மேற்படி எந்த கொடுமையும் எனக்கு நடக்கவில்லை என்றால் சரியல்ல. அரியக்குடியில் நானும் எனது கணவர் மட்டும் தான் வசித்து வந்தோம் என்றால் சரிதான். எனது கணவர் DSP அலுவலகத்தில் புகார் கொடுத்ததில் விசாரணையில் காவல் துறையினர் எனது புகாரில் முகாந்திரம் இல்லை என்றும் நீதின்றத்தின்மூலம் தீர்வு கண்டுகொள்மாறு சொல்லிவிட்டனர் என்றால் சரியல்ல. திருமணத்தின் போது புகார்தாரர் தரப்பில் இருந்து எதிரிக்கு எவ்வளவு பவுன் கொடுக்கப்பட்டுது என்றால் 11 பவுன். எதிரி புகார்தாரருக்கு எந்த பவுனும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. திருமணம் முடிந்த இரவு எனக்கு அணிவித்த நகைகளை எனது மாமியார் வசம் ஒப்படைத்ததற்கு ஆவணத்தில் எனது மாமியார் கையொப்பம் செய்துள்ளார் அதை போலீசார் கைப்பற்றியுள்ளார்கள் என்றால் கைப்பற்றியுள்ளார்கள். மேற்படி ஆவணத்தில் வேறு யாரேனும் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்களா என்றால் இல்லை. எனது கணவர் எனது வீட்டில் இருந்து 30 பவுன் எடுத்து போனதாக சொல்வது எந்த தேதி என்றால் தெரியாது. எடுத்து போன அன்றைய தினமே மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். எந்த தேதியில்புகார் கொடுத்தேன் என்றால் 26.06.2017. சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதியில் பழனிச்சாமி நகரில் நான் கர்ப்பமாக இருக்கும் சமயத்தில்என்னை எனது கணவர் அடித்தாக சொல்லியுள்ளது பற்றி நான் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதியில் எனது சகோதரர் டென்ஸி அவரும் அவருடைய நண்பர் குமாரும், 1ம்எதிரியிடம் தகராறு செய்து அவரை தாக்கினார் என்றால் இல்லை. எனது அண்ணனும், குமாரும் சேர்ந்து 1ம் எதிரியை தாக்கி அவர் 1 வாரம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் தெரியாது. டென்ஸியின் மைத்துனர் மீது வழக்கு போடக்கூடாது என்பதற்காக காவல் நிலையத்திலேயே 29.04.2017 அன்று சமரசம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். எனது அண்ணன் டென்ஸின் எனது கணவரை அடித்து விட்டார் என்பதற்காக 04.05.2017 நான் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததகா சொல்லும் தேதியில் நான் புகார் கொடுக்கவில்லை 04.05.2017 அன்று திட்டமிட்டு புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் உண்மையில் நடந்திருந்தால் சம்பவத்தன்றே புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. எனது மாமனார், நாத்தனார், எனது கணவர் ஆகியோர் எந்தெந்த தேதியில் என்ன கொடுமை செய்தார்கள் என்று தனித்தனியாக சொல்லமுடியுமா என்றால் முடியாது. சொந்த விருப்பத்தின் பேரில்தான் வீட்டை வீட்டு சென்றேன். எதிரியை பலி

வாங்க வேண்டும் என்பதற்காக அவர் மீது பொய்யாக ஒரு புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த சம்பவத்திற்கும் சம்மந்தம் இல்லை. நான் தனிக்குடித்தனம் செல்ல வேண்டும் என்று எதிரி மீது பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. பழனிச்சாமி நகரில் கண்ணுற்ற சாட்சிகள் யாரையும் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. முதல் விசாரணையில் சொல்லியுள்ள தங்கை என்பவர் எனது சொந்த தங்கச்சியா என்றால் இல்லை. அம்மாவை கேட்டால் தான் தெரியும். முதல் விசாரணையில் சொல்லியுள்ள தங்கச்சியை இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். போலீசார் நகைகள் எதாவது கைப்பற்றி என்னிடம் கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. குடும்ப வன்முறை எதுவும் நடக்கவில்லை, எனது கணவருக்கு தான் கொடுமை நடந்துள்ளது. நான் பொய்யாக புகார் கொடுத்து அதனடிப்படையில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.07.22 11:03:20 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# CC. No.697/2022 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | அமலராணி | க-பெ | ராஜசேகரன் |
| ஊர்: | : | புலியால் | | |
| வயது: | : | 59/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | விவசாயம் | மாவட்டம் | இராமநாதபுரம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **20.07.2026**

1 ம் **எதிரி ஆஜர், பிற எதிரிகள் ஆஜர் இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் புலியாலில் வசித்து விவசாய்ம செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகள். 29.05.2015 அன்று எனது மகளுக்கும் ஆஜர் எதிரிக்கும் செஞ்சை குழந்தை தெரசா திருமண மண்டபத்தில் கிருஸ்தவ முறைபடி திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் போது அ.சா.1க்கு 60 பவுன் நகைகளும், 11 பவுன் தங்க நகைகளும், 4,50,000 பணமும் வரதட்சனையாக கொடுத்தோம். பின்னர் 1 வாரம் கழித்து 18 லட்சம் ரூபாய்க்கு வீடு விலைக்கு வருவதாகவும், அதை வாங்க வேண்டும் என்றும் எனது மருமகன் எனது மகளிடமும், என்னிடமும் சொன்னார். இதை எனது மகள் என்னிடம் சொன்னார். நாங்கள் இவ்வளவு பணம்செலவு செய்துவிட்டோம் இப்போது எங்களிடம் இல்லை என்று சொல்லிவிட்டோம். கொடுப்போம் என்னு சொல்லி தானே திருமணம் செய்தீர்கள் இப்போது தரவில்லை என்று என்னிடமும் எனது வீட்டுக்காரரிடமும் எனது மருமகன் மாமியார் ஆகியோர்கள் கேட்டார்கள். நாங்கள் இப்போது பணம் இல்லை என்று அவர்களிடம் சொன்னோம். பின்னர் 1 வாரம் கழித்து நீ வாங்கி வந்தால் தான் நீ வீட்டிற்கு வர முடியும் என்று ஆஜர் எதிரி மற்றும் எனது மகளின் மாமியார் ஆகியோர் சொல்லிவிட்டார்கள். எனது மகள் எனது வீட்டிற்கு வந்து அழுதார். இப்போது என்னிடம் பணம் இல்லை என்று அவரிடம் சொன்னேன். பின்னர் 1 வாரம் கழித்து எனது மகளை ஆஜர் எதிரி அவரது கணவரிடம் பேசி வீட்டிற்கு கொண்டு வந்து விட்டுவிட்டோம். பின்னர் எனது மகள் அவருடன் 3 மாதம் குடித்தனம் நடத்தினார். பின்னர் அவர் வெளிநாட்டிற்கு 40000 சம்பளம் என்று சொல்லி வேலைக்கு சென்று விட்டார். எனது மகளின் மாமியார் உனக்கு வேலை இல்லை என்று விரட்டி விட்டார்கள். அதன் பிறகு எனது மகள் எங்கள் வீட்டிற்கு வந்து விட்டார். பின்னர் எனது மருமகன் எனது மகளிடம்போன் மூலம் எந்த தொடர்பு சொய்யவில்லை. பின்னர் 1 வருடம் கழித்து செஞ்சையில் உள்ள ஆஜர் எதிரி வீட்டில் சென்று நாங்கள் பார்த்த போது வீட்டின் கேட்டை பூட்டி வைத்திருந்தார்கள். ஆனால் உள்ளே அவர்கள் இருந்தார்கள். நாங்கள் கதவை தட்டினோம்,

ஆனால் நீதிமன்றத்திற்கு சென்று பார்த்துக்கொள்ளுமாறு சொன்னார்கள். பின்னர் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு காரைக்குடி அனைத்து மகளிர் காவல் நிலையம் சென்று புகார் அளித்தோம். போலீசார் எங்களை விசாரணை செய்தார்கள். மேற்படி விவரங்களை அவர்களிடம் நாங்கள் சொன்னோம். போலீசார் எங்களிடம் விசாரணை செய்த போது 60 மற்றும் 11 பவுன் நகைகள் ஆக மொத்தம் 71 பவுன் தங்க நகைகளை ஆஜர் எதிரி மற்றும் மாமியார் வீட்டார் வாங்கி வைத்திருப்பதாக சொன்னோம். போலீசார் நகைகளை கொடுத்துவிடுமாறு ஆஜர் எதிரி குடும்பத்தாருக்கு அறிவுறுத்தினார்கள். போலீசார் சேர்ந்து வாழ சொல்லுமாறு சொன்னார்கள். சேர்ந்து வாழ முடியாத பட்சத்தில் நகைகளை கொடுத்துவிடுமாறு ஆஜர் எதிரி குடும்பத்தாரிடம் சொன்னார்கள். போலீசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்கள். இதன் பிறகு மகள் எனது மருமகனுடன் குடித்தனம் நடத்தி கர்பமுற்று இருந்தார். அப்போது 30 பவுன் நகைகள் எனது தங்கை முறை உறவினர்கள் மூலமாக பெற்று அதனை எதிரி குடும்பத்தாருக்கு நாங்கள் கொடுத்தோம். மேற்படி நாங்கள் கொடுத்த நகைகளை ஆஜர் எதிரி அவர் அம்மாவிடம் கொடுத்தார். மீண்டும் காவல் ்நிலையம் சென்று போலீசார் விசாரணையில் 30 பவுன் நகைகளை வாங்கி தருமாறு கேட்டோம்.போலீசார் எதிரி குடும்பத்தாரிடம் கேட்டு நகைகளை கொடுக்க சொன்னதற்கு நகைகளை கொடுக்கவில்லை. பின்னர் நகைகளை கொடுக்காத காரணத்தால் எதிரி குடும்பத்தார்கள் மீது வழக்கு பதிவு செய்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பு கோரிக்கையை ஏற்று குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.07.22 11:03:25 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.